# Government strongly condemns vandalisation of Mahatma Gandhi's statue in Davis, California, USA

January 30, 2021

## அமெரிக்காவின் கலிபோர்னியா டேவிஸ் நகரில் மகாத்மா காந்தி சிலை சேதப்படுத்திய சம்பவத்தை இந்தியா வன்மையாக கண்டிக்கிறது

ஜனவரி 30, 2021

28, ஜனவரி 2021 அன்று, கலிபோர்னியாவின் டேவிஸ் நகரில் உள்ள மதிய பூங்காவில் உள்ள மகாத்மா காந்தி சிலை அடையாளம் தெரியாத நபர்களால் சேதப்படுத்தப்பட்டது. இந்த சிலை 2016 வருடம் இந்தியா அரசால் பரிசாக வழங்கப்பட்டது.

அமைதி மற்றும் நீதிக்கான உலகளாவிய மரியாதைக்குரிய ஐகானுக்கு எதிரான இந்தத் தீங்கிழைக்கும் மற்றும் இழிவான செயலை இந்திய அரசு கடுமையாக கண்டிக்கிறது.

இந்தச் சம்பவம் குறித்து முழுமையான விசாரணை மற்றும் இந்த இழிவான செயலுக்கு காரணமானவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வாஷிங்டன் டி.சி. யில் உள்ள இந்தியத் தூதரகம் இந்த விஷயத்தை அமெரிக்க வெளியுறவுத் துறையுடன் எடுத்து சென்றுள்ளது. சான் பிரான்சிஸ்கோவில் உள்ள இந்தியத் துணைத் தூதரகம் இந்த விவகாரத்தை டேவிஸ் நகரம் மற்றும் உள்ளூர் சட்ட அமலாக்க அதிகாரிகளுடன் தனித்தனியாக எடுத்துக் சென்றது, அவை விசாரணைகளை தொடங்கின. டேவிஸ் மேயர் இந்தச் சம்பவத்திற்கு ஆழ்ந்த வருத்தம் தெரிவித்ததோடு, அவர்கள் விசாரணையை தொடங்கியுள்ளதாகவும் தெரிவித்தனர். உள்ளூர் இந்திய சமூக அமைப்புகள் காழ்ப்புணர்ச்சியைக் கண்டித்துள்ளன.

இந்தக் காழ்ப்புணர்ச்சி செயல் ஏற்றுக் கொள்ள முடியாதது என்று அமெரிக்க வெளியுறவு துறை தெரிவித்துள்ளதுடன், குற்றவாளிகள் விரைவில் நீதிக்கு கொண்டு வரப்படுவார்கள் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தியுளனர்,

நியூ டெல்லி
**ஜனவரி 30, 2021**

DISCLAIMER: This is an approximate translation. The original is available in English on MEA's website and may be referred to as the official press release.